# நம்பிக்கைச் சுடர்

நம்பிக்கையால், நம்பிக்கையில் ஒளி வீச

சுடர் 21 · ஜூலை 18




என் ஆண்டவரே! என் தேவனே! யோவான் 20:28

## திருத்தூதர் யூதா ததேயு திருயாத்திரைத்தலம்

**வாணுவம்பேட்டை, சென்னை.**

# Hopeful Thursday













## பங்குத் தந்தையிடமிருந்து



**இறை இயேசுவில் அன்பு நிறைந்த சகோதர சகோதரிகளே,**

2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6ஆம் தேதி நமது திருத்தூதர் புனித யூதா ததேயு ஆலய வரலாற்றில் மறக்க முடியாத ஒரு நாள். அன்று முதல் வியாழன். திருப்பலியின் போது பாடுபட்ட திருச்சிலுவையிலிருந்து ஐந்து காயங்களிலும் எண்ணெய் அபிஷேகம் வெளிப்பட்ட நாள். இதற்கு நாம் அனைவரும் சாட்சிகள். நீங்களே சாட்சிகள்.

இக்கோவிலை மாட்சியால் நிரப்புவேன். இவ்விடத்தில சுகமளிப்பேன் என்று வார்த்தை அருளப்பட்டது. அன்று முதல் இன்று வரை அநேக சாட்சிகள். அநேக புதுமைகள் நடந்து கொண்டே இருக்கிறது.

நாங்கள் கண்ணால் கண்டதையும், காதால் கேட்டதையும் எப்படி பேசாமல் இருக்க முடியும்? என்று அன்று திருத்தூதர்கள் இயேசு என்னும் வாழ்வின் நற்செய்தியை அஞ்சாமல் துணிவுடன் அறிவித்தார்கள். ஆகவே உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். நம் ஆலயத்தில் நடந்த இந்நிகழ்வு பற்றி நீங்கள் எல்லாரிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள். நற்செய்தி அறிவிக்கப்பட்டால் நம்பிக்கை பெருகும். அதுபோல நாம் கண்டதையும் அனுபவித்ததையும் நான்கு பேரிடம் பகிர்ந்தால் தான் நமது ஆலயத்தைப் பற்றி பிறருக்கு தெரிய வரும். நீங்கள் உயிருள்ள நற்செய்தியாளர்கள். நமது ஆலயத்தில இப்பொழுது ஓராண்டாக அநேகர் தலைவாசலிலிருந்து பலிபீடத்தை நோக்கி மடி ஏந்தி, பரிகார முழந்தாளில் பீடம் நோக்கி தங்களையே வருத்தி மேற்கொள்கின்ற வேண்டுதல் கண்களையும் உள்ளத்தையும் உருகச் செய்கின்றது. நீங்களும் இதுபோன்ற முயற்சியில், விசுவாச நடையில் ஈடுபட்டு உங்களின் விண்ணப்பங்களை உருக்கமாக ஒப்புக் கொடுத்து செபிக்கலாம்.

திருத்தூதர் புனித தோமையார் மலையில் அவர் கையால் செதுக்கிய கற்சிலுவையிலிருந்து இரத்தம் கசிந்தது என்று பாரம்பரியம் சொல்லுகிறது. கருத்தாங்கிய அன்னைக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட ஆலயம் மலை மேலே இருக்கிறது. அதுபோல நம்முடைய திருத்தூதர் புனித யூதா ததேயு திருயாத்திரைத் தலத்திலும் இத்தகைய ஆசீர்— திருச்சிலுவை ஐந்து காயங்களிலிருந்தும் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அபிஷேகம்.

போலந்து நாட்டிலிருந்து நமது ஆலயத்தில் நிறுவப்பட்டிருக்கும் இயேசுவை எதிர் நோக்கிய அன்னையின் சுரூபம், இவை யாவும் கடவுளின் செயலே. நம்புவோர்க்கு எல்லாம் ஆகும்.

கடந்த இரண்டு ஆண்டுகள் நம் பங்கிலே பணியாற்றிய அருட்சகோதரிகள். டெல்ஃபின் மற்றும் ஜெயமேரி இருவருக்கும் பங்கு இறைச் சமூகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாக பொறுப்பெடுத்துள்ள அருட்சகோதரிகள் சார்மிளா மற்றும் அக்ஸிலியா **(SMA)** இருவருக்கும் வரவேற்பும், பணி சிறக்க வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைக்கல்வி வகுப்புகளுக்கு கட்டாயமாக உங்கள் பிள்ளைகளை அனுப்பி வைக்கவும். அடிப்படைச் செபங்கள், விவிலியக் கதைகள், விசுவாச போதனைகளை அறிந்து கொள்ள மறைக்கல்வி வகுப்புகள் உதவியாக இருக்கும்.

வாழ்த்துக்கள் மற்றும் செபங்களுடன்

ST. JUDE'S CHURCH CHENNAI 600 091 VANUVAMPET

**அருட்பணி. மைக்கேல் சுரேஷ்**
**(பங்குத் தந்தை)**
புனித யூதா ததேயு திருயாத்திரைத்தலம்
வாணுவம்பேட்டை, சென்னை - 91.




**நம்பிக்கைச் சுடர்** மாத இதழுக்கு வாசகர்களின்
விளம்பரங்கள் வரவேற்கப் படுகின்றன.
தொடர்புக்கு அணுகவும்:
99629 48443, 98407 78588


## தொடர்பு

*வாசகர்களாகிய உங்கள் மேலான விமர்சனங்கள், கருத்துக்கள் மற்றும் ஜெப விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன.*
*தெரிவிக்கப் படவேண்டிய முகவரி:*


**நம்பிக்கைச் சுடர் இதழ்,**
**திருத்தூதர் யூதா ததேயு திருயாத்திரைத் தலம்,**
**எண்-9, மேடவாக்கம் மெயின் ரோடு, வாணுவம்பேட்டை, சென்னை-91**

“Or mail to”
flameofhope@st-judeshrine.com
Like our page & get all updates from
**Fb page - http://www.facebook.com/st-judesshirinevanuvampet/**
**website-http://www.st-judesshrine.com**

உங்களுடைய மேலான ஒத்துழைப்புக்கு நன்றி.

## திருத்தந்தை பிரான்சிஸ் மறையுரை



பகைவரை மன்னித்து, செபித்து, அன்பு கூர்வது கிறிஸ்தவ பண்பு

ஜூன், 19, 2018 சாந்தா மார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில், காலை திருப்பலி நிறைவேற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பகைவருக்காக செபித்து, அவர்களையும் அன்புகூர்வதே கிறிஸ்தவ பண்பு என, இச்செவ்வாய்க்கிழமை காலையில் திருப்பலியில் மறையுரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில், காலை திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நாளின் நற்செய்தி வாசகமான மத்தேயு 5ம் பிரிவில் கூறப்பட்டுள்ள மன்னிப்பு, செபம் மற்றும் பகைவருக்கு அன்பு என்பது குறித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். நாம் மன்னிக்கப்படுவதற்கு, முதலில் நாம் பிறரை மன்னிக்க வேண்டும் என்பதை ஒரு முன்நிபந்தனையாக, இயேசு கற்பித்த செபத்திலேயே நாம் உரைக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிறரை மன்னித்தால் மட்டும் போதாது, நாம் அவர்களுக்காகச் செபிக்கவும் வேண்டுமென இயேசு விரும்புகிறார் என மேலும் கூறினார்.

எதிரிகளை மன்னிப்பது எளிதாகத் தெரிந்தாலும், அவர்களுக்காகச் செபிப்பது என்பது அவ்வளவு எளிதாகப் புரிந்துகொள்ள கூடியதல்ல எனக் கூறிய திருத்தந்தை, கிறிஸ்தவர்களால் அது எளிதாகப் புரிந்துக் கொள்ள முடியும், ஏனெனில் கிறிஸ்துவும் தன்னை சிலுவையில் அறைந்தவர்களை மன்னிக்கும்படியாக, சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்போதே இறைவனிடம் வேண்டினார் என்றார்.

சைபீரியா உறைபனியில் சாகும்படியாக அனுப்பப்பட்ட இரஷ்ய கிறிஸ்தவர்களும், ஆஷ்விட்ஸ் வதைப்போர் முகாம்களில் கொல்லப்பட்ட மக்களும் எப்படி தங்கள் ஆட்சியாளர்களுக்காக செபித்திருக்க முடியும் என்ற கேள்வியை எழுப்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கொடுங்கோல் ஆட்சிபுரிந்த தங்கள் தலைவர்களுக்காக, தங்கள் மரணவேளையிலும் இந்த கிறிஸ்தவர்கள் செபித்தது உண்மை. இவர்களிடமிருந்து, மன்னிப்பதையும் பகைவருக்காகச் செபிப்பதையும் நாம் கற்றுக்கொள்ளமுடியும் என்றார்.

இயேசு மன்னித்ததையும், தூய ஸ்தோவான் மன்னித்ததையும் விவிலியத்தில் காணும் நாம், எத்தனை சூழல்களில் நாம் மன்னிக்காமல் செயல்பட்டிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க

வேண்டும் என்ற அழைப்பையும் முன் வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பகைவரை மன்னிப்பது, அவர்களுக்காகச் செபிப்பது, அவர்களை அன்புகூர்வது போன்றவைகளை இயேசுவே நமக்குத் தெளிவாக விளக்குகிறார் என மேலும் கூறினார். இறைத்தந்தை நிறைவுள்ளவராக இருப்பதுபோல், நாமும் இருக்க வேண்டும் என்பதற்காக இறையருளை வேண்டுவோம் என உரைத்து, தன் மறையுரையை நிறைவு செய்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

**ஆதாரம்: வத்திக்கான் வானொலி**

## பாடகர் குழு

| | | |
|---|---|---|
| முதல் ஞாயிறு | பங்கு இளையோர் | Mr. J.P. |
| இரண்டாம் ஞாயிறு | பெரியோர் பாடகர் குழு | Mr. Andreas |
| மூன்றாம் ஞாயிறு | பங்கு இளம்பெண்கள் | Mr. J.P. |
| நான்காம் ஞாயிறு | மறைக்கல்வி மாணவ, மாணவியர்கள் | Mr.John |
| ஐந்தாம் ஞாயிறு | பெரியோர் பாடகர் குழு | Mr. Andreas |

## "ஜூலை மாத வியாழன் சிறப்பு வழிபாடு"

| வ.எண் | தேதி | சிறப்புக் கருத்து |
|---|---|---|
| 1. | 05.07.2018 | பொது மற்றும் புனித யூதா ததேயு பக்தர்களுக்கான வழிபாடு |
| 2. | 12.07.2018 | பெற்றோர்களுக்கான வழிபாடு |
| 3. | 19.07.2018 | மறை மாவட்ட குருக்கள் மற்றும் இருபால் துறவியர்களுக்கான வழிபாடு |
| 4. | 26.07.2018 | நோயாளிகளுக்கான வழிபாடு |

## புனித மரிய கொரற்றி (ஜூலை 06)

**நிகழ்வு:**

*1950ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் நாள் மரிய கொரற்றிற்கு புனிதர் பட்டம் கொடுக்கப்பட்ட நாள். அன்றைக்கு அவருக்கு புனிதர் பட்டம் கொடுக்கப்படுகிறது என செய்தியைக் கேள்விப்பட்டு, உரோமையில் உள்ள தூய பேதுரு சதுக்கத்துக்கு ஒரே நேரத்தில் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் கூடிவந்தார்கள். இவ்வளவு மக்களும் அங்கே இருப்பது இயலாத காரணத்தினால், புனிதர் பட்ட நிகழ்வுகள் பேதுரு சதுக்கத்திற்கு வெளியே வைத்து நடத்தப்பட்டது. திருச்சபையின் வரலாற்றில் தூய பேதுரு சதுக்கத்தில எந்தப் புனிதருக்கும் இவ்வளவு கூட்டம் கூடியதில்லை. மரிய கொரற்றிற்கே முதல் முறையாக இவ்வளவு மக்கள் கூடி வந்தார்கள்.*

*காரணம் அவருடைய மாசற்ற, தூய வாழ்க்கை.*

**வாழ்க்கை வரலாறு:**

*மரிய கொரற்றி இத்தாலியில் உள்ள கோரினால்டோ என்னும் இடத்தில் 1890 ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய குடும்பம் மிகவும் ஏழ்மையான விவசாயக் குடும்பம். அன்றாடம் உழைத்து, அதிலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்து பிழைக்கக்கூடிய குடும்பம்.*

*ஒரு சமயம் மரிய கொரற்றியின் தந்தை, தன்னுடைய குடும்பம் பிழைப்பதற்கு கொரினால்டோவில் எந்தவித வசதியும் இல்லை என முடிவெடுத்து, உரோமையில் உள்ள நெட்டுனோ என்ற இடத்திற்கு குடிபெயர்ந்தார். அங்கே சென்ற ஒருசில ஆண்டுகளிலே அவர் மரணமடைந்தார். இதனால் குடும்ப பாரம் மரிய கொரற்றியின் தலையில் விழுந்தது. மரிய கொரற்றியின் தாயார் ஏற்கனவே பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்ததால் குடும்பத்தில் எல்லாப் பொறுப்புகளையும் அவரே பார்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர் வீட்டிலிருந்து துணிகளைத் தைத்து அதிலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்து குடும்பத்தை பராமரித்து வந்தாள்.*

*மரிய கொரற்றி 1902ஆம் ஆண்டு தன்னுடைய 12ஆம் வயதில் புதுநன்மை வாங்கினார். அன்றிலிருந்தே அவர் மிகவும் தூய்மையான வாழ்க்கையை வாழத் தொடங்கினார். பாவம் செய்து வாழ்வது கடவுளுக்கு விரோதமான வாழ்க்கை, எனவே பாவத்திலிருந்து*

*எப்போதும் தன்னைப் பாதுகாத்துக்கொண்டே வாழ்ந்து வந்தார். மரிய கொரற்றி இருந்த வீட்டிற்கு பக்கத்தில் அலெச்சாண்ட்ரோ என்ற 19 வயது இளைஞன் வசித்து வந்தான். அவன் எப்போதும் மரிய கொரற்றிக்கு தொல்லை கொடுத்து வந்தான். ஒரு சமயம் மரிய கொரற்றி வீட்டில் தனியாக இருந்த சமயம், அலெக்சாண்ட்ரோ என்ற அந்த இளைஞன் உள்ளே வந்து, மரிய கொரற்றியை தன்னுடைய காம இச்சைக்கு இணங்குமாறு கேட்டான். ஆனால் அவரோ, பாவம் செய்வது கடவுளுக்கு விரோதமானது. என்னை நீ பாவத்திற்கு இணங்கச் செய்தால் நீ நரகத்திற்குத்தான் போவாய்" என மிகக் கண்டிப்பாய் கூறினார். ஆனால் அந்தக் காமுகனோ மரிய கொரற்றியை பலமுறை கத்தியால் குத்திக் கிழித்தான்.*

*குற்றுயிராய் கிடந்த மரிய கொரற்றியைக் காப்பாற்றுவதற்கு மருத்துவமனைக்கு எடுத்துக்கொண்டு போனார்கள். ஆனால் அவரோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இருபத்து நான்கு மணி நேரத்திற்கு உள்ளாகவே இறந்துபோனார். இவர் இறப்பதற்கு முன்பாக தன்னைக் கொலை செய்த காமுகனை முற்றிலுமாக மன்னித்துவிட்டதாகக் கூறினார். மரிய கொரற்றியை கொலைசெய்த அலெக்சாண்ட்ரோ கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான். அவனுக்கு முப்பது ஆண்டுகள் சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டது. சிறையில் இருந்த நாட்களில் மரிய கொரற்றி அவனுக்கு காட்சி கொடுத்தார். அந்தக் காட்சியில் அவர் அவனுக்கு, "விண்ணிலிருந்து கைநிறைய மலர்களைத் தூவுவேன்" என்றார். இக்காட்சிக்குப் பிறகு அவன் மனம் மாறினான். இதனால் அவன் விரைவாகவே விடுதலை செய்யப்பட்டான். விடுதலையான பிறகு நேராகச் சென்று, மரிய கொரற்றியின் தாயிடம் மன்னிப்புக் கேட்டான்.*

*இந்த சமயத்தில தான் அதாவது 1950, ஜூன் 22ஆம் நாள் உரோமை நகரில் மரிய கொரற்றிக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது. அந்த புனிதர் பட்ட நிகழ்வில் மரிய கொரற்றியின் தாய் மற்றும் சகோதரியோடு இவனும் கலந்துகொண்டு முற்றிலும் மனம் மாறினான். அதன்பிறகு இவன் கப்புசின் 3ஆம் சபையில் சேர்ந்து, அங்கே ஒரு சகோதரராக வாழ்ந்து 1970ஆண்டு இறந்து போனான்.*

**மரிய கொரற்றி 20ஆம் நூற்றாண்டின் புனித ஆக்னஸ் என அழைக்கப்படுகிறார்.**

## புனித அல்போன்சாவின் இன்னல் நிறைந்த இன்ப வாழ்வு

புனித அல்போன்சா 1910ம் ஆண்டு ஆகஸ்ட் 19ம் தேதி கேரளாவில் கோட்டயம் மாவட்டத்தில் உள்ள குடமாளூர் என்ற கிராமத்தில் ஜோசப் முட்டத்துபாடத்து மற்றும் மேரி தம்பதியரின் நான்காவது குழந்தையாக பிறந்தவர்.

1910ம் ஆண்டு ஆகஸ்ட் 27ம் தேதி தூய மரியன்னை ஆலயத்தில் வைத்து அன்னா என்ற பெயருடன் திருமுழுக்கு செய்ய பெற்று தனது ஊரில் அன்னக் குட்டி என்று செல்லமாக அழைக்கப்பட்டவர்.

அன்னக்குட்டி இளம் வயதில் விளையாடினாரோ இல்லையோ ஆனால், விதி அவர் வாழ்வில் விளையாடத் தவறவில்லை.

அன்னக்குட்டியின் இளம் வயதிலேயே அவரின் தாயார் இறந்து விட்டார். தாயில்லாக் குழந்தையான அன்னக் குட்டியை அவரின் அத்தை தான் வளர்த்து வந்துள்ளார்.

இந்நிலையில், 1923ம் ஆண்டு அவருக்கு திருமணம் செய்து வைக்க வீட்டில் திட்டமிட்டதால் தீக்குழியில் குதித்து தன்னையே காயப்படுத்தி திருமணத்தை தடுத்துக் கொண்டுள்ளார்.

இந்த சம்பவத்தினையடுத்து, இவர் கிறிஸ்து மீது கொண்ட அதீத பற்று காரணமாகவே இவ்வாறு தன்னை காயப்படுத்திக் கொண்டார் என்பது தெரிய வரவே 1928 ஆம் ஆண்டில் (தனது 17 வயதில்) அல்ஃபோன்சா எனும் பெயரைத் தாங்கி கன்னியாஸ்திரியாக துறவறத்தில் சேர்ந்தார்.

கன்னியாஸ்திரியாக இருந்த பொழுது, அன்னக் குட்டி சில காலம் ஆரம்பப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். தொடர்ந்து பல முறை வியாதியால் தாக்கப்பட்டு பல சொல்லொன்னாத இன்னல்கள் நடுவே 1946ம் ஆண்டு ஜூலை 28ம் நாள் தன் ஆன்மாவைத் தன் இதயவேந்தன் இயேசுவுக்குக் கையளித்து இயேசு, மரியாள், சூசையப்பர் திரு நாமங்களை உச்சரித்தவாறு விண்ணுலகில் மலந்தார்.

அருட்சகோதரி அல்போன்சா கொல்கத்தாவில் வாழ்ந்த அருட்சகோதரி புனித தெரசா போன்று சமூகத் தொடர்புடைய சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளவில்லை, மாறாக நான்கு சுவர்களுக்கிடையே தனது புனித வாழ்வை தமது மடத்தில் நோயின் காரணமாக படுக்கையிலேயே தமது பணியை செய்து கொண்டிருந்தார்.

பல்லாண்டுகள் தனது இன்னல் நிறைந்த சுகவீனத்தை இயேசுவுக்கு அன்புக் காணிக்கையாக ஒப்புக் கொடுத்துக் கொண்டே வேண்டுதல்களை நிறைவேற்றினார்.

இவர் தனது நாட் குறிப்பேட்டில் அவரது இன்னல்களைப் பற்றக் கூறும் பொழுது, கோதுமை மணிகள் இயந்திரங்களால் அரைப்பட்டு மாவாகிய பின்னர் அது நாம் உட்கொள்ளும் திவ்விய நற்கருணையாக மாறுகின்றது.

திராட்சைக் கனி நன்றாக அரைத்து பிழியப்பட்ட பின் ரசமாக மாறுகிறது. இதுவே நாம் பருகும் இயேசுவின் குருதியாகிறது. இது போன்ற வருத்தங்களாலும், உடல் துன்பங்களாலும் அல்லல்படும் நாம் அதன் மூலம் சிறந்த மனிதர்களாக மாற்றப்படுகின்றோம். இந்த தத்துவத்தின் அடிப்படையிலேயே அருட்சகோதரி இன்னல்களை வாழ் நாட்கள் முழுவதும் ஏற்றுக் கொண்டார்கள்.

என்றும் தனியாத இயேசுவின் பால் கொண்ட ஆர்வமும், எந்த விதமான கோட்பாட்டிற்கும், உள்ளடங்காத கட்டுப்பாட்டிற்கும் மேற்பட்டு இயேசுவின் பாதங்களில் அவர் முழுவதுமாக தன்னை அர்ப்பணித்தார். அவரிடம் அடைக்கலமானார். இதுவே அன்னக்குட்டி என்று தனது ஊரில் செல்லமாக அழைக்கப்பட்ட சிறுமியின் வாழ்வு. எந்த விதமான சிறப்பம்சங்களும் இல்லாதிருந்தது.

இவர் 1999ல் ஒரு பச்சிளங்குழந்தையின் வளைந்த பாதங்கள் குணப்படுத்தப்பட்டதாய்க் கூறப்படும் நிகழ்வே அல்ஃபோன்சா அன்னைக்குப் புனிதர் பட்டம் வழங்குவதற்கு மிகப்பெரிய காரணமாய் அமைந்தது.

மேலும், புனித அல்போன்சாவை கௌரவிக்கும் படியாக இந்திய அரசு 19 ஜூலை 1996ஆம் வருடம் அவருடைய தபால் தலையை வெளியிட்டுட்டுள்ளது.

2008ம் ஆண்டு அக்டோபர் 12ம் தேதி திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களால் புனிதராக அறிவிக்கப்பட்டார். புனித அல்போன்சாவின் திருத்தலங்கள் இந்தியாவில் பல மாநிலங்களில் மட்டுமல்லாது அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் வாழும் ஒரு லட்சம் சிரியன் மலபார் கிறிஸ்தவர்களில் இரண்டு பங்குகள் அருட்சகோதரி அல்போன்சா பெயர் தாங்கி செயல்படுகின்றன.

விண்ணுலக புகழ் பெற்ற இவரை நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஒவ்வோராண்டும் சூலை 19 முதல் 28 தேதிகளில் விருந்து நடக்கும். இந்த விருந்திற்கு ஆயிரக் கணக்கான மக்கள் புனித அல்போன்ஸ் அம்மாளின் அருளாசி பெறும் பொருட்டு கூட்டம் கூட்டமாக வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தூய கார்மேல் அன்னை (ஜூலை 16)

**நிகழ்வு:**

பாலஸ்தீன நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள மத்தியத் தரைக்கடலுக்கு அருகே உள்ள மலைதான் கார்மேல் மலையாகும்.

ஒரு சமயம் இம்மலையில் இறைவாக்கினர் எலியா இஸ்ரயேலை ஆண்ட மன்னர் ஆகாப்பிடம் உன்னிடம் பாகால் தெய்வத்தின் பொய்வாக்கினர்கள் நானுற்றைம்பது பேர் இருக்கிறார்களே, அவர்கள் எல்லாரையும் வரவழை, பாகாலின் சார்பாக அவர்கள் எல்லாரும் நிற்கட்டும். என் கடவுளின் சார்பாக நான் மட்டும் நிற்கிறேன். ஒரு காளையை வெட்டி பலிபீடத்தில் வைப்போம். ஆனால் நெருப்பு வைக்கக்கூடாது. யாருடைய பலியை வானத்து நெருப்பு இறங்கி வந்து எடுத்துக் கொள்கிறேதோ, அது தான் உண்மையான கடவுள் சம்மதமா?" என சவால் விட்டார். அதற்கு மன்னர் சம்மதம் தெரிவித்தார். உடனே பாகாலின் இறைவாக்கினர்கள் எல்லாரும் அங்கு வந்தார்கள். அவர்கள் அதிகாலையிலேயே ஒரு பலிபீடத்தைக் கட்டி, ஒரு காளைையயை வெட்டி அதன் மீது வைத்துவிட்டு பாகாலை அழைக்க ஆரம்பித்தார்கள். "பாகாலே வாரும், நெருப்பை அனுப்பி பதிலைத் தாரும்" நண்பகல் வரை அழைத்தும் பாகால் ஒரு பதிலும் தரவில்லை. எனவே மக்கள் எல்லாரும் அந்தப் பலிபீடத்தைச் சுற்றி பாட்டுப் பாடி ஆட்டம் போட ஆரம்பித்தார்கள்.

எலியா அவர்களை நோக்கி, "இன்னும் கொஞ்சம் சத்தமாய்க் கத்துங்கள். பாவம் பாகால், அவன் உறங்கிக் கொண்டிருக்கலாம் அல்லது ஒதுக்குப் புறமாக போயிருக்கலாம், இன்னும் கத்துங்கள்" என்று கிண்டல் செய்தார். அவர்கள் "பாகலே பதில் தாரும்" என்று தொடர்ந்து கத்தினார்கள். ஆனால் பாகால் பதில் ஏதும் சொல்லவில்லை.

அப்போது எலியா அவர்களை எல்லாரையும் அழைத்தார். "வாருங்கள், பாகாலின் பிரதிநிதிகளே வாருங்கள். கொஞ்சம் ஓய்வெடுங்கள். பாவம் ஆடிப்பாடி களைத்திருக்கிறீர்கள். இப்போது நான் செய்வதைக் கவனியுங்கள்" என்று சொல்லிவிட்டு எலியா இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களைக் குறிப்பிடும் விதமாக பன்னிரண்டு கற்களைக் கொண்டு ஒரு பலிபீடத்தைக் கட்டினார். அந்த பலிபீடத்தைச் சுற்றிலும் வாய்க்கால் வெட்டினார். பின் பலிபீடத்தின் மீது ஒரு காளையை வெட்டி வைத்தார். காளையின் மீது பன்னிரண்டு குடம் தண்ணீர் ஊற்றினார். பலிக்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்தபின் அவர் கடவுளை நோக்கி, "கடவுளே! இதோ உமது பலிப்பொருள். நீரே உண்மையான கடவுள் என்பதை இம் மக்களுக்கு காட்டும்" என்றார். உடனே வானத்திலிருந்து நெருப்பு இறங்கி வந்து எலியாவின் பலிபீடத்தில் விழுந்தது. காளையும், விறகுகளும் கொழுந்து விட்டெரிந்தன. வாய்க்கால் நீர் வற்றிப் போய்விட்டது.

இதைக் கண்ட மக்கள் அனைவரும் "ஆண்டவரே கடவுள், ஆண்டவரே கடவுள்" என்று கத்திக் கொண்டே தரையில் விழுந்து வணங்கினார்கள். பாகாலின் போலி இறைவாக்கினர்கள் பயந்து நடுங்கி ஓடினார்கள். மக்கள் அவர்களைத் துரத்திப் பிடித்து எலியாவிடம் ஒப்படைக்க, எலியா அவர்கள் நானூற்று ஐம்பது பேரையும் கொன்று ஓடையில் வீசினார். அதன் பின் அவர் மன்னனை அழைத்து, "இப்போதாவது நீ உண்மையான கடவுளை உணர்ந்து கொள், இன்று முதல் நாட்டின் பஞ்சம் விலகும். மழை பெய்யும்" என்றார். மன்னர் அவ்விடம் விட்டு அரண்மனையை அடையும் முன் பெருமழை நாட்டை குளிர்வித்தது. (1அரசர்கள் 18)

எலியா இறைவாக்கினர் போலி இறைவாக்கினர்களை வெற்றிகொண்ட கார்மேல் மலையில், அவருடைய சீடர்கள் தொடர்ந்து வாழ்ந்து வந்தார்கள். அவர்களே பின்னாளில் "கார்மலைட்ஸ்" என அழைக்கப்பட்டார்கள். இவர்கள் 1245ஆம் ஆண்டு, அங்கு ஏற்பட்ட முகமதியர்களின் படையெடுப்புக்குப் பின் இங்கிலாந்துக்கு மாறிப்போனார்கள்.

**வரலாற்றுப் பின்னணி:**

முகமதியர்களின் படையெடுப்புக்குப் பின்னால் இங்கிலாந்தில் குடிபெயர்ந்த கார்மேல் சபைத் துறவிகள் தலைவராகப் பொறுப்பேற்றவர் சைமன் ஸ்டோக் என்பவர். இவர் சபைத் தலைவராகப் பெற்றுப்பேற்ற பிறகு நிறைய பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. அப்படிப்பட்ட தருணத்தில் 1251 ஆம் ஆண்டு ஜூலை 16ம் நாள், சைமன் ஸ்டோக் மரியன்னைக்கு முன்பாக வேண்டிக் கொண்டிருந்தார். அப்போது மரியன்னை அவருக்குக் காட்சி கொடுத்து, அவரைத் தேற்றினார். அது மட்டுமல்லாமல் கரு நிறத்தில் இருந்த உத்தரிக்கத்தைக் கொடுத்து, "இதை அணிந்துக் கொள், இதை அணிந்து கொள்வோரை இடர்களிலிருந்தும், நரக தண்டனையிலிருந்தும் காப்பாற்றி அமைதி தருவேன்" என்று சொல்லிவிட்டு மறைந்துபோனார்.

அதன்பிறகு சைமன் ஸ்டோக் என்ற அந்த கார்மேல் சபைத் துறவி உத்தரியம் அணிந்துகொள்கிற வழக்கத்தை சபைத் துறவிகளிடத்தில் கொண்டு வந்தார். அது இன்றைக்கு படிப்படியாக வளர்ந்து, பொதுமக்களும் அணிந்துகொள்ளும் அளவுக்கு வந்துவிட்டது.

**கற்றுக்கொள்ளவேண்டிய பாடம்:**

கார்மேல் அன்னை அல்லது உத்தரிக்க அன்னையின் விழாவைக் கொண்டாடும் இந்த நாளில் இவ்விழா நமக்கு உணர்த்தும் செய்தி என்ன என்று சிந்தித்துப் பார்ப்போம்.

1. அன்னையின் பாதுகாப்பும் அன்னையின் வழி நடப்பதும்:
அன்னையானவள் சைமன் ஸ்டோன் என்ற அந்த கார்மேல் சபைத் துறிவியிடம் காட்சியின் போது சொன்னது, "உத்தரிக்கத்தை யாராரெல்லாம் அணிந்திருக்கிறார்களோ, அவர்கள் நரக தண்டனையிலிருந்து காப்பாற்றப் படுவார்கள்" என்பதுதான். நாம் உத்தரிக்கத்தை அணியும் போது அன்னையின் பாதுகாவலைப் பெறுகிறோம். அதே நேரத்தில் நாம் அந்த அன்னை வாழ்ந்து காட்டிய நெறியின் படி வாழ அழைக்கப்படுகின்றோம்.

மரியன்னை கிறிஸ்தவ வாழ்விற்கு முன்மாதிரி. அவள் தாழ்ச்சிக்கு, பிறரன்புக்கு, கீழ்படிதலுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். ஆகவே நாம் அன்னையைப் போன்று தாழ்ச்சியில், பிறரன்பில், கீழ்ப்படிதலில் வளரும்போது அன்னையின் அன்புப் பிள்ளைகள் ஆகின்றோம், அதே நேரத்தில அவளது பாதுகாவலைப் பெறுகின்றவர்கள் ஆகின்றோம்.

எனவே, இந்த நாளில் நாம் அன்னையின் வழி நடக்க முயற்சிப்போம். அன்னையின் பாதுகாப்பையும் அரவணைப்பையும் இறையருளையும் நிறைவாய் பெறுவோம்.

## மறைக்கல்வி சிட்டுகளுக்கு

**வார்த்தையின் சக்தி - எண்ணங்கள் அழகானால்...... எல்லாம் அழகாகும்.**

**ஹலோ குட்டீஸ்,**

*ஒருவர் வெகுநாட்களாக கொடிய நோயால் பாதிக்கப்பட்டு அவதியுற்று வந்தார். ஒரு நாள் அவரைப் பார்க்க, குரு ஒருவர் அவர் வீட்டிற்கு வந்தார். வாடிய உடலோடு, மனமும் சோர்வுற்ற நிலையில் இருந்தார் அந்த நோயுற்றிருந்த நபர்.*

*இதைப் பார்த்த குரு, நாம் அனைவரும் இவருக்காக இறைவனிடம் வேண்டிக் கொள்வோம் என கூறி மனமுருகி அவருக்காக வேண்டிக் கொண்டார். அங்கிருந்த அவரது நண்பர்களும், உறவினர்களும் அவரோடு இணைந்து கடவுளை வேண்டத் தொடங்கினார்கள். பிறகு அந்த குரு, இறைவனின் அருளால், நிச்சயம் உங்களுக்கு நோய் குணமாகி விடும். இத்தனை பேரும் உங்கள் நோய் குணமாக வேண்டி இருக்கிறார்கள். உங்களுக்கு உடல் நிலை சரியாகி விடும் எனக் கூறினார்.*

*அந்தக் கூட்டத்தில் நாத்திகன் ஒருவன் இருந்தான். குரு சொன்னதைக் கேட்டதும் நக்கலாய் அவன் சிரிக்கத் தொடங்கினான். வெறும் வார்த்தைகள் போய் அவனைக் குணப்படுத்துமா? அல்லது வெறும் சொற்கள் மாற்றத்தை ஏற்படுத்துமா?" என கூறி சிரித்தான்.*

*அதற்கு அந்த குரு, இந்தக் கூட்டத்திலேயே மிகப் பெரிய முட்டாள், மூடன், மூர்க்கன் நீங்கள் தான் என சொன்னார்.*

*இதைக் கேட்டதும் அவன், நீங்கள் கூறியதற்கு உடனே மன்னிப்பு கேளுங்கள். இல்லையேல் உங்களை அடித்து விடுவேன் என்றபடி அடிக்கப் பாய்ந்தான்.*

*பதற்றமே இல்லாத அந்த குரு, முட்டாள், மூடன், மூர்க்கன் என்பது வெறும் சொற்கள் தானே, அவை உங்களை இப்படி மாற்றி விட்டதே, எப்படி? இந்த சொற்கள் உங்களை எப்படி தூண்ட முடிகிறதோ, அதே போல தான் நல்ல சொற்களால் பல மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றார்.*

*இதைக் கேட்ட அந்த நாத்திகன் வெட்கித் தலை குனிந்தான்.*

*நம் எண்ணங்களுக்கும், வார்த்தைகளுக்கும் சக்தி உள்ளது என்பதை வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.*

*ஆனால் பல நூறு வருடங்களுக்கும் சக்தி உள்ளது என்பதை வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.*

*ஆனால், பல நூறு வருடங்களுக்கு முன்பே, "நல்லதையே நினை, நல்லதையே பேசு" என அழகாக நம் முன்னோர்கள், சொல்லி விட்டனர்.*

*நாம் இன்று என்ன நிலையில் இருக்கின்றோமோ, அந்நிலையை கொடுத்தது, நம் எண்ணங்களே!!!*

*எண்ணங்கள் அழகானால்............எல்லாம் அழகாகும்.*

**அதனால் செல்லங்களே! நீங்கள் வாழ்வில் சிறக்க நல்ல அழகான எண்ணங்களையே எண்ணுங்கள். வாழ்வில் வளம் பெறுவீர்கள்.**

**வாழ்த்துக்கள், குட்டீஸ்.**

# 10. அருள்பணியாளரின் பணியும் வாழ்வும்

| தீர்மானம் | செயல்திட்டங்கள் | பொறுப்பு | காலம் |
|---|---|---|---|
| 256, 257 அருள் பணியாளரின் வாழ்வு | அர்ப்பண வாழ்வு, ஆழமான இறை அனுபவம், நற்செய்தி ஆர்வம், மக்கள் பணி இவை அருள்பணியாளர் வாழ்வின் இலக்கணமாக அமைய வேண்டும்.<br>அருள்பணியாளர்களின் வாழ்விலும், நிர்வாகத்திலும் நேர்மையும் நம்பகத்தன்மையும் வெளிப்படையாக உணரப்பட் வேண்டும். | அருள்பணியாளர் | தொடர் செயல்பாடு |
| 263, 264 அருள் வாழ்வு உதவிகள் | அருள்பணியார்கள் ஒவ்வொருவரும் ஒரு தனிப்பட்ட ஆன்ம வழிகாட்டியைத் தேர்ந்தெடுத்து அவரின் ஆலோசனை உதவியை அவ்வப்போதுப் பெற வேண்டும்.<br>தனிச் செப வாழ்வு, ஒப்புரவு அருள் அடையாளம் இவற்றில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.<br>அருள்பணியாளர்கள் திரு அவையின் செபத்தைத் தவறாமல் செபிப்பதைத் தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும்.<br>மறைமாவட்ட அருள்பணியாளர்கள் ஒருவருக்குமே பலர் இணைந்து பணி செய்யும் தளங்களில் இணைந்து திருஅவையின் செபத்தைச் செபிப்ப நெறிபடுத்தப்பட்டட தொடர் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.<br>அருள்பணியாளர்கள் ஆண்டு தியானம், மாதாந்திர தியானம் மறைமாவட்டப் பொது நிகழ்வுகளில் தவறாமல் பங்கேற்க வேண்டும். இயலாத சூழ்நிலையில் ஆயரிடம் முன்கூட்டியே அறிவிப்புத் தந்து விடுப்பு அனுமதிப் பெற வேண்டும்.<br>அருள்பணியாளர்கள் தாங்கள் ஒப்புக் கொடுக்கும் திருப்பலி விவரங்களை அதற்குரிய நாளேட்டில் பதிவுச் செய்து ஆண்டு தியானத்தின் போது அதில ஆயரின் கையொப்பம் பெற வேண்டும். | மறைமாவட்ட நிர்வாகம், அருள்பணியாளர்கள் | தொடர் செயல்பாடு |
| 258, 275 அழைப்பு வாழ்வு | அருள்பணியாளர் காலத்தின் கட்டாயங்களுக்கு அடிப்பணியாமல், சாதி, பணம், பதவி அதிகார மோகம் இவற்றைக் கடந்து, எளிய வாழ்வால் தங்களின் அழைப்பை அர்த்தமுள்ளமாக்கிக் கொள்ள வேண்டும்.<br>இதன் வெளிப்பாடாக மறைமாவட்ட தேவைக்கேற்ப ஆயரின் பொதுநலத் திட்டத்திற்குப் பணிந்து, எந்த இடத்திலும் எந்தப் பணியையும் எந்த நேரத்திலும் ஏற்றுக் கொள்ளவும், மாற்றிக் கொள்ளவும் தாராள | அருள்பணியாளர்கள் | தொடர் செயல்பாடு |

| | | | |
|---|---|---|---|
| **259, 269** அருள் பணியாளரும், மறை மாவட்டமும் | அருள்பணியாளர்கள் மறைமாவட்டத்தின் பொது இலட்சியங்களை, கொள்கைகளை, பணிநோக்கங்களைத் தமதாக்கிக் கொள்ள வேண்டும். மறைமாவட்டத்தின் ஒட்டுமொத்த நலனுக்காக, தேவைப்படின், சொந்த விருப்பு சார்புகளைத் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். மறைமாவட்டத்தின் நலனை முன்னிறுத்தி திறந்த மனத்துடன் நிர்வாகத்தைப் பார்ப்பதும், நடப்புகளை நலமான திறனாய்வுச் செய்வதும், கருத்து வேறுபாடுகளைக் குறித்து ஆரோக்கியமாக உரையாடுவதும், கிறிஸ்தவ மனநிலையோடு தவறுகளைச் சுட்டிக்காட்டுவதும், நேர்மறையான ஆலோசனைகளைக் கண்ணியமாக வழங்குவதும் ஊக்குவிக்கப்பட்டு வரவேற்கப்பட வேண்டும்.<br>அருள்பணியாளர்கள் தனி மனிதர்கள் அல்லது சிறு குழுக்களைச் சார்ந்தவர்கள் என்ற நிலையைக் கடந்து, திரு அவை, மறைமாவட்டம், ஒரே குருக்குலம் என்ற பரந்த பார்வையில் கூட்டுப்பணி மேற்கொள்ள வேண்டும். உடன் அருள்பணியாளர்களை மதிக்கவும், தாங்கவும் தயராக இருக்க வேண்டும்.<br>இளம் மற்றும் உதவி அருள்பணியாளர்களை ஊக்குவிப்பதும், வழிகாட்டுவதும் உருவாக்குவதும் மூத்த அருள்பணியாளர்களின் கடமையாக உணரப்பட வேண்டும். | அருள்பணியாளர்கள் | தொடர் செயல்பாடு |
| **260** அருள் பணியாளரும் , ஆயரும் | குருத்துவத்தின் முழுமையைப் பெற்றவர் என்ற இறையியல் கண்ணோட்டத்துடன், திருஅவையின் வழிகாட்டி என்ற கீழ்படிதல் மனப்பான்மையுடன், பணியில் தந்தை / மூத்த சகோதரர் என்ற நிலையில் அருள்பணியாளர் ஆயரைப் பார்ப்பதும் மதிப்பதும் அணுகுவதும் அவசியமாகும்.<br>திறந்த மனதுடன் நேர்மையான நோக்குத்துடன் இருவழி உறவாக அருள்பணியாளர் – ஆயர் உறவு அமைய வேண்டும்.<br>ஆண்டுக்கொரு முறையாவது ஒவ்வொரு அருள்பணியாளரும் தன் ஆயருடன் தனிப்பட்ட விதத்தில் தன் பணி மற்றும் வாழ்வுப்பற்றி வெளிப்படையாக உரையாட வாய்ப்பு தேடிக்கொள்ள / தரப்பட வேண்டும்.<br>ஆயர் அருள்பணியாளர்களின் ஆர்வம், விருப்பம், திறமை, கல்வி, அனுபவம் வயது இவற்றை தனிப்பட்ட விதத்தில் அறிந்துக் கொண்டவராய், அவர்களை ஊக்குவித்து அவர்களுக்குப் பொறுப்புகள் தரப்பட வேண்டும். | ஆயர், அருள்பணியாளர்கள் | தொடர் செயல்பாடு |

தொடரும்.

## குட்டிக் கதை

"தெருவிலே சுற்றிக் கொண்டிருந்த நாய் ஒன்று"
"தவறி போய் அரண்மனைக்குள் நுழைந்தது"...

"அந்த அறைக்குள் நுழைந்த நாய்க்கு அதிர்ச்சி"......
"அங்கே சுற்றியும் நூற்றுக் கணக்கான நாய்கள் இருந்தன"
சற்று எரிச்சலடைந்தது "உர்ர்.....உர்ர்" என்றது"

"அந்த நூறு நாய்களும் பதிலுக்கு "உர்ர்.....உர்ர்" என்றது"
அந்த நாய் கொஞ்சம் பயந்து விட்டது.
இருந்தும் கோபம் தாளாமல்...........
லொள் லொள் என குரைக்க ஆரம்பித்தது.
எல்லா நாய்களும் சேர்ந்து குரைத்தது........

அந்த நாய் குரைப்பதை நிறுத்தியவுடன்
மற்ற எல்லா நாய்களும் குரைப்பதை நிறுத்திக் கொண்டது.

அந்த தெரு நாய்க்கு கோபமும் பயமும் அதிகமானது.
உடனே,
வெறி பிடித்ததை போல் தொடர்ந்து குரைக்க ஆரம்பித்தது.
பதிலுக்கு அந்த நாய்களும் குரைத்தன.

இந்த நாய் பயத்தின் உச்சத்தில்........
வெறி பிடித்து தொண்டை கிழிய குரைத்துக் கொண்டே மயங்கியது.

இறுதியில் அந்த நாய் பயத்தில் இறந்தே போய் விட்டது"

"இறந்து போன அந்த நாய் கொஞ்சம் கவனித்து இருந்தால்"
அதற்கு புரிந்திருக்கும்

1. தான் நுழைந்தது
"நூற்றுக் கணக்கான கண்ணாடிகளை கொண்ட அறை என்று"

2. தன்னை சுற்றி இருந்தது......... "தனது பிம்பங்கள் தான் என்று"...

3. குரைத்தது சுற்றி இருந்த நாய்கள் அல்ல.........
"தன் குரலின் எதிரொலி தான் என்று".............

"இந்த உலகம் ஒரு கண்ணாடி போன்றது".........

நாம் கோபப்பட்டால்.......
"பதிலுக்கு கோபம் கிடைக்கும்"..............

அன்பு செலுத்தினால் "அன்பு கிடைக்கும்"...............

"நீ எதை விதைக்கிறாயோ"
"அதுவே முளைக்கும்"....

# அப்போஸ்தலர் தோமா




இயேசுவின் 12 அப்போஸ்தலர்களில் (சீடர்கள்) ஒருவர் தான் தோமா என்பவர். தோமாவைப் பற்றிய "பைபிளில்" இருந்து ஆதார வசனங்களை கீழே பார்க்கவும்.

மத்தேயு 10:3: பிலிப்பு, பார்த்தலமேயு, தோமா, வரி தண்டினவராகிய மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோப்பு, ததேயு.

மாற்கு: 3:18 அந்திரேயா, பிலிப்பு, பர்த்தலேமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் மகன் யாககோபு, ததேயு, தீவிரவாதியார் இருந்த சீமோன்.

லூக்காஸ் 6:15 மத்தேயு, தோமா, அல்பேயுவின் மகன் யாக்கோபு, தீவிரவாதி எனப்பட்ட சீமோன்.

யோவான்: 11:16 திதிம் என்னும் தோமா தம் உடன் சீடரிடம் "நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்" என்றார்.

யோவான்: 14:5 தோமா அவரிடம், "ஆண்டவரைக் கண்டோம்" என்றார்கள். தோமா அவர்களிடம், அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன் என்றார்.

யோவான்: 20:26 எட்டு நாட்களுக்குப் பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்ததும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று வாழ்த்தினார்.

யோவான் 20:27: பின்னர் அவர் தோமாவிடம் "இதோ என் கைகள். இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கைகொள்" என்றார்.

யோவான் 20:28: தோமா அவரைப் பார்த்து "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்றார்.

யோவான் 21:2: சீமோன் பேதுரு, திதிம் எனப்படும் தோமா கலிலேயாவிலுள்ள கானாவைச் சேர்ந்த நத்தனியேல், செபதேயுவின் மக்கள் ஆகியோரோடு இயேசுவின் சீடர்களுள் வேறு இருவரும் கூடியிருந்தனர்.

திருத்தூதர் பணிகள் 1:3: பேதுரு, யோவான், யாக்கோபு, அந்திரேயா, பிலிப்பு, தோமா, பர்த்தலேமேயு, மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோபு, தீவிரவாதியான சீமோன், யாக்கோபின் மகன் யூதா

ஆகியோர் திரும்பி வந்தபின் தாங்கள் தங்கியிருநத் மேல்மாடிக்கு சென்றார்கள். இப்பகுதியில் அப்போஸ்தலர் தோமா இந்தியாவிற்கு வந்த வரலாறு, அப்போஸ்தலர் தோமா வருவதற்கு முன் இந்தியாவில் எப்படி இருந்தது மற்றும் எப்படி மாறியது என்பதை சுருக்கமாக பார்ப்போம்.

இயேசுவின் விண்ணேற்றத்திற்கு பிறகு அவரின் சீடர்கள் அனைவரும் பல நகரங்களுக்கும் பல நாடுகளுக்கும் இயேசுவின் நற்செய்தியை அறிவிக்க பிரிந்து சென்றனர். அப்போஸ்தலர் தோமா இந்தியாவிற்கு வந்தார்.

இயேசுவின் சீடராகிய அப்போஸ்தலர் தோமா முதலில் இந்தியாவின் வடபகுதியில் ஆண்ட அரசனை சந்தித்திருப்பதாக கி.பி 2ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ''தோமாவின் பணிகள்'' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கி.பி 20லிருந்து கி.பி. 50 வரையிலேயே இந்த ராஜ்ஜியம் இருந்தது. இது இந்தோ— பார்த்தியன் ராஜ்ஜியம் ஆகும். இதன் அரசனாக ''கோண்டாபோரோஸ்'' இருந்துள்ளார். இவரின் தலைநகரமாக '' தக்ஷில்லா'' இருந்துள்ளது. இந்த நகரம் இப்பொழுது பாகிஸ்தானில் உள்ளது.

''குஷன்'' ராஜ்ஜியத்தால் கி.பி. 50ல் முடிவுக்கு வந்தது. ''கோண்டோபோரோஜ்'' என்ற அரசன் தோமாவால் கிறிஸ்தவத்திற்கு மாற்றப்பட்டார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. தோமாவின் பணிகள் என்ற நூலில் அதிகாரம் 17ல் இந்த நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளது. ஆனால் இதை பல காலகட்டத்திற்கு இந்த நூலை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர் 1872ம் ஆண்டு காபுல் மற்றும் பஞ்சாப் (பாகிஸ்தான்) ''கோண்டாபோரோஸ்'' இருந்ததற்கான ஆதாரமாக சில கல்வெட்டுகளும், நாணயங்களும் கிடைத்தன. அதற்குப் பின்னர் தான் இந்த நூலில் உள்ள ''கோண்டாபோரோஸ்'' உண்மை என்பது தெரிந்தது.

இப்பொழுது வரலாற்று ஆசிரியர்கள் இரண்டு ''கோண்டோபோரோஸ்'' அரசர்களில் யார் என்பது தெளிவு படவில்லை. காரணம் அந்தக் காலகட்டத்தில பல அரசர்கள் ''கோண்டாபோரோஸ்'' என்ற பெயருடன் இருந்துள்ளனர். அவர்களில் c.AD 20 - 50 Gondophares Parthian vassal who declared independence மற்றும் AD85 Sases / Gondophares-Sases என்பவர்கள் ஆவார்கள்.

கி.பி 40களில் அப்போஸ்தலர் தோமா ''கோண்டாபோரோஸ்'' சை சந்தித்திருக்கக்கூடும். பின்னர் கேரளாவிற்கு கி.பி. 52ல் வந்திருக்கிறார்.

கி.பி. 52ல் கேரள மாநிலத்தில் உள்ள மலபார்'' கடற்கரையில் உள்ள கிரங்கனூர் அல்லது கொடுங்கல்லூர் என்ற இடத்தில் வந்திறங்கியிருக்கிறார். அப்போஸ்தலர் தோமாவின் அற்புத போதனையால் பல கிறிஸ்தவத்திற்கு மாறியுள்ளனர். அவருக்குப் பின் பல ஆலயங்களும் கட்டப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர் தோமா இந்தியாவின் பல இடங்களுக்கும் மற்றும்

சீனாவின் சில இடங்களுக்கும் சென்றுள்ளார். கி.பி. 59ல் சென்னையில் உள்ள மைலாப்பூருக்கு சென்றுள்ளார்.

பின்னர் கி.பி. 72ல் இரத்த சாட்சியாக இறந்துள்ளார்.

அப்போஸ்தலர் தோமாவின் மரித்த நினைவு நாளாக இந்திய அரசாங்கத்தால் 1973 ஜூலை 3ல் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

அப்போஸ்தலர் தோமாவின் நினைவாக 1964ல் இந்திய அரசாங்கத்தால் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

தோமாவிற்க்கு பின்னர் பல ஆலயங்கள் நிறுவப்பட்டுள்ளன.

1. கிரங்கனூர்
2. கிலோன் (கொல்லம்)
3. நிரணம் (நில்கிண்டா)
4. நிலக்கல் (காயல்)
5. கொக்கமங்கலம் (பள்ளிபுரம்)
6. பரூர் (கொட்டகாவு)
7. பாலூர் (பழையூர்)

தோமாவின் சிறப்பான போதனைகளாலும் இறைவனின் துணையாலும் பலர் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஒளியையும் சத்தியத்தையும் கண்டடைந்தனர்.

எவ்வளவு மக்கள் கிறிஸ்த்துவை ஏற்றுக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் சுவாமி விவேகானந்தர் சொல்கிறார்.

The purest Christians in the world were established in India by the Apostle Thomas about twenty-five years after the death of Jesus. This was while the Anglo - Saxons were still savages, painting their bodies and living in caves. The Christians in India once numbered about three millions, but now there are about one million.
Inspired Talks - Volume 7)
Thursday, July 11, 1895,
(Recorded by MISS S.E.Waldo, A. Disciple)





# விவிலிய வினாடி வினா

**ஜூன் மாத விவிலிய வினாக்கள்**

1. ................இன்றிப் பாவ மன்னிப்பு இல்லை.
2. ................இப்போது தம்மையே பலியாகக் கொடுத்து, பாவங்களைப் போக்குவதற்காக ஒரே ஒருமுறை உலகில் வெளிப்படுத்தப்பட்டார்.
3. ஆண்டவர் எதற்காக மீண்டும் ஒரு முறை தோன்றுவார்?
4. அவர் தாம் அடையவிருந்த ............. பொருட்டு ...................பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார்.
5. ........................, ...................... மறவாதீர்கள். இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை.
6. இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்து தந்தையாம் கடவுள் நமக்கு என்ன அளித்தார்?
7. கிறிஸ்து படவேண்டிய துன்பங்களையும் அவற்றுக்குப்பின் அடையவேண்டிய மாட்சியையும் இறைவாக்கினர்களுக்கு முன்னறிவித்தது யார்
8. "உங்கள் மூதாதையரிடமிருந்து வழிவழியாய் வந்த வீணான நடத்தையினின்று உங்களை விடுவிக்க கொடுக்கப்பட்ட விலை" என்னவென்று பேதுரு சொல்கிறார்?
9. சிலுவையின் மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம்......... க்கு இறந்து .....................க்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார்.
10. .................. ஆகிய அவர்......................க்காக இறந்தார்.............இயல்போடிருந்த அவர் இறந்தாரெனினும் .......................இயல்புடையவராய் உயிர்பெற்றெழுந்தார்.
11. இறந்து உயிர்த்த நிலையில் இயேசு யாருக்குப் போய்த் தம் நற்செய்தியை அறிவித்தார்?
12. எந்த மனிநிலையை நீங்களும் படைக்கலமாக பூண்டு கொள்ளுங்கள் என்று பேதுரு அறிவுறுத்துகிறார்?
13. அன்புக்குரியவர்களே, துன்பத்தீயில் நீங்கள் சோதிக்கப்படும்போது, ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டதென வியக்காதீர்கள். மாறாக, இதை எண்ணி மகிழுங்கள். எதை?
14. அவர் மகனாகிய இயேசுவின் இரத்தம் எல்லாப் பாவத்தினின்றும் நம்மைத் தூய்மையாக்கும். அதிகாரம், வசன எண் கூறுக?
15. நம் பாவங்களுக்குக் கழுவாய் அவரே, நம் பாவங்களுக்கு மட்டும் அல்ல. அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே, அதிகார வசன எண் கூறுக?
16. கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால்...................இன்னதென்று அறிந்து கொண்டோம். ஆகவே நாமும் நம் சகோதரர் சகோதரிகளுக்காக ................கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.
17. எதில் தான் அன்பின் தன்மை விளங்குகிறது என்று புனித யோவான் கூறுகிறார்.?
18. தோமா இயேசுவைப் பார்த்து என்ன கூறினார்?
19. இயேசு தம் சீடருக்கு எந்த கடல் அருகே மீண்டும் தோன்றினார்?
20. பேதுரு திரும்பிப் பார்த்த போது யார் பின்தொடர்வதைக் கண்டார்?
21. இயேசு இறந்து உயிருடன் எழுப்பப்பட்டபோது பிறகு எத்தனை முறையாக தம் சீடருக்குத் தோன்றினார்?
22. இயேசு எப்போது விண்ணேற்றமடைந்தார்?
23. இயேசு துன்புற்று இறந்த பின்பு எத்தனை நாட்கள் தோன்றி சீடர்களுக்கு இறையாட்சியைப் பற்றி கற்பித்தார்?
24. இயேசுவை எடுத்துச் சென்று சீடர்கள் பார்வையிலிருந்து மறைத்தது எது?
25. கலிலேயரே இயசேு விண்ணற்றமடைந்தது போல் மீண்டும் வருவார் என சொன்னது யார்?

## விவிலிய வினாடி வினா

### கடந்த மாத பதில்கள்

1. திருச்சபைக்காக (கொலோ 1:24)

2. அடக்கம் (கலா 2:12)

3. உயிர் (கொலோ 2:120)

4. கடன் பத்திரத்தை (கொலே 2:14)

5. சிலுவையினால் கிடைத்த வெற்றியால் அவர்களின் படைக்கலன்களைப் பிடுங்கி கொண்டு ஊர்வலமாக இழுத்துச் சென்றார் (கொலோ 2:15)

6. பஞ்சபூதங்களிலிருந்து (கொலே 2: 20-21)

7. மேலுலகு (கொலோ 3:1)

8. இறந்து, மறைந்து (கொலோ 3:3)

9. இறைவாக்கினரையும் (1 தெச 2:15

10. 1 தெச 4:14

11. இருந்தாலும், இறந்தாலும் (1 தெச 5:10)

12. மானிடராய் (1 திமொ 3:16)

13. குறைச் சொல்லுக்கு (1 திமொ 6:14)

14. பேரின்பக் கடவுள் (1 திமொ 6:15)

15. சாவை (1 திமொ 6:16)

16. அழியா வாழ்வை (2 திமொ 1:10)

17. இறந்து உயிர் பெற்று எழுந்தார் (2 திமொ 2:8)

18. இறந்தால் வாழ்வோம் ( 2திமொ 2:11)

19. எனக்கு மட்டுமல்ல, அவர் தோன்றுவார் என விரும்பி காத்திருக்கும் அனைவருக்குமே தருவார் எனக் கூறுகிறார். (2 திமொ 4:8)

20.மாட்சியும், மாண்பும் (எபிரேயர் 2:9)

21 கடவுளுடைய அருளால் அனைவருடைய நலனுக்காகவும் சாவுக்கு உட்பட வேண்டியிருந்தது. (எபிரேயர் 2:9)

22. சாவின், சாவின் (எபிரேயர் 2:14)

23.சோதிக்கப்படுவோருக்கு (எபிரேயர் 2:18)

24.கீழ்ப்படிதலைக் (எபிரேயர் 5:18)

25.வெள்ளாட்டுக் கிடாய்கள், கன்றுக்குட்டிகள் (எபிரேயர் 9:12)

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 15.07.2018**

# தூய லயோலா இஞ்ஞாசியார் (ஜூலை 31)

**நிகழ்வு:**

ஒரு சமயம் இஞ்ஞாசியார் தேயேகோ லேனசிடம் பேசிக்கொண்டிருந்தார். அப்போது இஞ்ஞாசியார் அவரிடம் "சகோதரரே! ஒரு வேளை கடவுள் உங்களிடம் உடனடியாக விண்ணகம் செல்லலாம் அல்லது இவ்வுலகில் இருந்து மகிமைப்படுத்த ஏதாவது செய்யலாம் என்ற வாய்ப்பைக் கொடுத்தால் எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்?" எனக் கேட்டார். அதற்கு தேயேகோ, "நான் உடனடியாக விண்ணகம் செல்வேன்" என்றார். பின்னர், அவர் இஞ்ஞாசியாரிடம் அதே கேள்வியைத் திருப்பிக் கேட்டார். அதற்கு இஞ்ஞாசியார், "நான் என் பங்கிற்குக் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற இவ்வுலகில் தங்கி விடுவேன். என் ஆன்மாவை ஈடேற்றும் பொறுப்பை கடவுள் பார்த்துக் கொள்வார். அவர் மீது கொண்ட அன்பினால் விண்ணகத்திற்குத் தாமதாமாக வருபவரை அவர் கைவிட்டுவிடமாட்டார்" என நம்புகிறேன், என்றார்.

லயோலா இஞ்ஞாசியார் எப்போதும் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதில் ஆர்வம் கொண்டிருந்தார். அதனால்தான் இன்றைக்கு நாம் அவருடைய விழாவைக் கொண்டாடி மகிழ்கின்றோம்.

**வாழ்க்கை வரலாறு:**

இஞ்ஞாசியார் ஸ்பெயின் நாட்டில் உள்ள லயோலா என்னும் இடத்தில் 1491ஆம் ஆண்டு பிறந்தார். இவர்தான் குடும்பத்தின் கடைசிப் பிள்ளை. இவருடைய குடும்பம் அரச குடும்பம். எனவே, செல்வச் செழிப்பில், எல்லா விதமான இன்பங்களையும், அனுபவித்து வாழ்ந்து வந்தார். இவருடைய கனவெல்லாம் மிகச் சிறந்த போர்வீரனாக மாற வேண்டும் என்பதே ஆகும். அதற்காக அவர் கடுமையாகப் பாடுபட்டார்.

1521ஆம் ஆண்டில் ஒரு நாள் பிரான்சு நாட்டு இராணுவம் இவர் இருந்த பம்பிலோனா கோட்டையை சுற்றி வளைத்துக்கொண்டது. நீண்ட நேரம் நடைபெற்ற போராட்டத்தில இவருடைய கால்களில் கடுமையான காயம் ஏற்பட இவர் நிலைகுலைந்து போனார். பின்னர் இவர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைத்து வைக்கப்பட்டார். அப்போது இவர் அங்கே இருந்தவர்களிடம் வாசிப்பதற்கு ஏதாவது கொடுங்கள் என்று கேட்டபோது, அவர்கள் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தையும், புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தையும் இவருக்குக் கொடுத்தார்கள். அதை வாசிக்க வாசிக்க இஞ்ஞாசியார் ஒருவிதமான பரவசநிலையை உணர்ந்தார். அதுமட்டுமல்லாமல் இதுவரை தான் வாழ்ந்த வாழ்க்கை முற்றிலும் வீண் என எண்ணத் தொடங்கி, சாதாரண மனிதர்கள் எல்லாம் புனிதராக மாறியிருக்கும்போது எதற்காக நாம் புனிதராக மாறக்கூடாது என சிந்தித்தார். அதன்படியே தன்னுடைய வாழ்க்கையை வாழத் தொடங்கினார்.

இஞ்ஞாசியாரின் இத்தகைய மனமாற்றத்திற்குப் பிறகு, அவர் மன்ரேசா குகைக்குச் சென்று, அங்கே பதினோரு மாதங்கள் ஜெபத்திலும், தவத்திலும் தன்னையே முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொண்டார். அவர் மேற்கொண்ட ஆன்மீகப் பயிற்சிகள் அனைத்தும் இன்றைக்கும் பலருக்கும் தூண்டுதலாக இருக்கின்றன. இஞ்ஞாசியார் அங்கு

ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொண்டிருந்த தருணம் அவருக்கு மரியன்னை குழந்தை இயேசுவோடு காட்சிதந்தார். அந்த நிகழ்வு அவருடைய வாழ்வில் மிகப்பெரிய திருப்புமுனையாக இருந்தது.

இஞ்ஞாசியார் தன்னுடைய ஆன்மீகப் பயிற்சிகளை முடித்துக்கொண்ட பிறகு எருசலேம் நகருக்குச் சென்று, புனித பூமியை பார்வையிட்டார். அதிலிருந்து அவர் ஆறுதலையும், புதிய தெம்பையும் பெற்றார். பின்னர் அவர் பாரீஸ் நகருக்குச் சென்று, அங்கே குருத்துவப் பணிக்காக தன்னையே பக்குவப்படுத்திக்கொண்டார். இலத்தின் போன்ற மொழிகளைக் கற்றுக்கொண்டு தன்னை மேலும் மெருகேற்றிகொண்டார். அங்கேதான் அவர் பிரான்சிஸ் சவேரியார், பீட்டர் பேபர் போன்ற ஆறு இளைஞர்களைச் சந்தித்தார். அவர்களைக் கொண்டு இயேசு சபை என்னும் புதிய சபை ஒன்றைத் தோற்றுவித்தார். அந்த சபையின் நோக்கம் மறைகல்வி போதிப்பதும், மறைபோதகப் பணியைச் செய்வதும், ஒப்புரவு அருட்சாதனங்களை செய்வதும், நோயாளிகளை, சிறையில் இருப்பவர்களை பார்த்து அவர்களுக்கு ஆறுதல் கூறுவதும் ஆகும். இன்றைக்கு இச்சபை உலகமெங்கும் பரவி பற்பல பணிகளைச் செய்கிறது என்றால் அதற்கான விதை இந்த ஆறுபேர் கொண்ட குழு போட்டதுதான்.

குருத்துவப் பயிற்சிகளை மேற்கொண்ட இஞ்ஞாசியார் 1538 ஆம் ஆண்டு குருவாக மாறினார். அதன்பிறகு அவர் உரோமை நகருக்குச் சென்று, திருத்தந்தை மூன்றாம் பவுலைச் சந்தித்து, தன்னுடைய சபையைப் பற்றி விளக்கிச் சொன்னார். பின்னர் இஞ்ஞாசியார் அவரிடம் புனித பூமியில் தன்னுடைய சபையார் பணிகளை மேற்கொள்ளப் போவதாகச் சொன்னார். ஆனால் திருத்தந்தை அவர்களோ, அங்கே பணி செய்ய ஏற்ற சூழல் இல்லாததால், உரோமை நகரிலே பணிசெய்யச் சொன்னார். அதன்படி இஞ்ஞாசியார் உரோமை நகரிலே பணி செய்தார். அவருடைய சபையைச் சேர்ந்த மற்றவர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று மறைபோதக பணிகளை மேற்கொண்டார்கள். இஞ்ஞாசியார் ஏற்படுத்திய இயேசு சபை, கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்ற மூன்று வார்த்தைப்பாடுகளோடு சேர்த்து, திருத்தந்தைக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நடத்தல் என்ற புதிய வார்த்தைப்பாட்டினையும் எடுத்துக் கொண்டது.

திருத்தந்தையின் ஆணையின் பேரில் உரோமை நகரில் பணிசெய்யத் தொடங்கிய இஞ்ஞாசியார் நோயாளிகளைச் சந்திப்பதுமாக, சிறையில் இருந்தோரை பார்க்கச் செல்வதுமாக மறைக்கல்வி கற்று தருவதுமாக பற்பல பணிகளைச் செய்தார். தான் செய்த பணிகள் அனைத்தையும் இறைவனின் அதிகமான மகிமைக்காகச் செய்தார். இப்படி ஓய்வில்லாமல் இறைப்பணி செய்த இஞ்ஞாசியார் 1554 ஆம் ஆண்டு ஜூலை 31ஆம் நாள் இந்த மண்ணுலக வாழ்க்கைத் துறந்தார். 1622ஆம் ஆண்டு இவர் புனிதராக உயர்த்தப்பட்டார்.

எனது பெயர் J. சகாயமேரி. என் கணவருக்கு இதயத்தில் பிரச்சனை இருந்தது. கால்கள் வீங்கி, நடக்க முடியாமல் சரிவர மூச்சு விட முடியாமல் வேலைக்கு செல்ல இயலாமல் மிகவும் கஷ்டப்பட்டார்.

டாக்டரிடம் பரிசோதனைக்கு சென்ற பொழுது பிரச்சனை பெரியதாக இருப்பதாகவும், குணப்படுத்துவது கடினம் என்றும் கூறினார்கள். என்ன செய்வதென்றே தெரியவில்லை. புனித யூதா ததேயு ஆலயத்திற்கு வந்தேன். பங்குத் தந்தையிடம் என் கணவரின் உடல் நிலை பற்றி கூறினேன். பங்குத் தந்தை அவர்களும் புனித யூதா ததேயுவின் பரிந்துரையால் எல்லாம் கூடும். இடைவிடாமல் செபியுங்கள் என்று கூறினார்கள். நாங்களும் தொடர்ந்து புனித யூதா ததேயுவின் பரிந்துரையில் மூவொரு இறைவனிடம் இதய நோயிலிருந்து முற்றிலும் குணமடைய வேண்டினோம். அவர் இப்பொழுது பாதி குணம் பெற்று விட்டார். 1 மாதம் மருந்து மாத்திரை எடுத்த பிறகு மீண்டும் டாக்டர் பரிசோதனைக்கு வர கூறியிருக்கிறார். மருத்துவருக்கெல்லாம் மருத்துவர் என் தேவன் என் கணவருக்கு பரிபூரண சுகம் அளிப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது. நம்பிக்கை இழந்தவர்களின் நம்பிக்கையான புனித யூதா ததேயு எனக்காக, என் வேண்டுதலுக்காக பரிந்து பேசுவார். என் மகனுக்கு ஒரு நல்ல கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டும் என்று மன்றாடினேன். அவனுக்கும் ஒரு நல்ல கல்லூரியில் இடம் கிடைத்தது. என் வேண்டுதல்களை கேட்ட கிருபைக்காக என் கணவருக்கும் பரிபூரண சுகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு எல்லாம் வல்ல இறைவனுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேதி: 7.6.18
செல்: 90426 28809

இப்படிக்கு,
J. சகாய மேரி,
புனித லூர்து மாதா பங்கு, மடிப்பாக்கம்.

## ஒவ்வொரு மாதமும் ஞாயிறு திருப்பலியை சிறப்பிப்பவர்கள் விவரம்

| | | |
|---|---|---|
| **முதல் வாரம்** | - | **பங்கு இறைச்சமூகம்** |
| **இரண்டாம் வாரம்** | - | **பக்த சபைகள்** |
| **மூன்றாம் வாரம்** | - | **அன்பியம்** |
| **நான்காம் வாரம்** | - | **மறைக்கல்வி** |
| **ஐந்தாம் வாரம்** | - | **அன்பியப் பொறுப்பாளர்கள்** |

**01.07.2018 முதல் ஞாயிறு:-**
பகல் 11.00 மணிக்கு ஆங்கிலத்தில் சிறப்பு நவநாள் செபம், நற்கருணை வழிபாடு,
(11 a.m Englsih Novena Prayer, Benediction, Holy Mass)
வழக்கம்போல் அனைத்து திருப்பலிகளும் நடைபெறும்.

**03.07.2018 புனித தோமா: இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா**
குறிப்பு: 04.07.2018 - 06.07.2018 மூன்று நாட்களும் மாலை 7.30 மணி முதல் 9.00 மணி வரை திருச்சிலுவை மகிமை ஆராதனைநடைபெறும்.

**05.07.2018 முதல் வியாழன் - நம்பிக்கை வியாழன் (Hopeful Thursday)**
பகல் 11.00 மணிக்கு சிறப்பு நவநாள் செபம், நற்கருணை வழிபாடு, குணமளிக்கும் செபம், திருப்பலி, பகல் உணவு
மாலை 6.30 மணிக்குச் சிறப்பு நவநாள் செபம், நற்கருணை ஆசீர், திருப்பலி மற்றும் தேர்ப்பவனி.

**06.07.2018 புனித யூதா ததேயு திருயாத்திரை தலத்தின்**
திருச்சிலுவையிலிருந்து ஐந்து காயங்களிலும், எண்ணெய் அபிஷேகம் வெளிப்பட்ட ஓராண்டு நினைவுக் கொண்டாட்டம்
சிறப்பிப்பவர்கள்: அருட்பணி: இயேசு நசரேன்,
இயக்குநர், அருங்கொடை இயக்கம், பாண்டிச்சேரி மறைமாவட்டம்
நேரம்: மாலை 6.00 மணி - திருப்பலி, திருச்சிலுவை மகிமை ஆராதனை

**02.08.2018 முதல் வியாழன் - நம்பிக்கை வியாழன் (Hopeful Thursday)**
பகல் 11.00 மணிக்கு சிறப்பிப்பவர்கள்: அருள்தந்தை. Dr. V. இக்னேஷியஸ், S.J.
சம்மசுக்களின் இராக்கினி தியான மையம்,
கீழ்க்கோட்டையூர், சென்னை

---

**நம்பிக்கை வியாழன் - சாட்சி 2**

என் பெயர் டயானா சித்தார்த். நாங்கள் குழந்தை அனாமிகாவோடு அமெரிக்காவில் பிராதான சாலையில் காரில் சென்று கொண்டிருந்தோம். அப்பொழுது கார் விபத்துக்குள்ளாகி கார் நொறுங்கி விட்டது. நாங்கள் புனித யூதா ததேயுவின் பக்தர்கள். விபத்துக்குள்ளான நேரத்தில் புனிதரிடம் தான் செபித்து வேண்டிக் கொண்டோம். கார் முழுவதும் நொறுங்கிய போதும் காருக்குள் இருந்த எங்களுக்கு சிறுகாயம் கூட ஏற்படாமல் அற்புதமாக காப்பாற்றப்பட்டோம். இந்த அதிசயத்தை நிகழ்த்திய எல்லாம் வல்ல இறைவனுக்கும், புனித யூதா ததேயுவிற்கும், அன்னை மரியாளுக்கும் கோடான கோடி நன்றிகள். எங்கள் அம்மாவிற்கும் US செல்ல விசா கிடைத்ததற்கும் நன்றிகள்.
இயேசுவுக்கே நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!
புனித யூதா ததேயுவே வாழ்க.

தேதி: 7.6.18
செல்: 8939911732

சித்தார்த், டயானா,
பேபி அனாமிகா
புழுதிவாக்கம்.

## ஜூலை மாத ஞாயிறு திருப்பலி வாசகங்கள்

01.07.2018 **ஆண்டின் பொதுக்காலம் 13-ஆம் ஞாயிறு**
முதல் வாசகம்: சாலமோனின் ஞானம் 1:13-15, 2:23-24
இரண்டாம் வாசகம்: 2 கொரிந்தியர் 8:7, 9:13-15
நற்செய்தி வாசகம்: புனித மாற்கு 5: 21-43
**சிறப்பிப்பவர்கள்: பங்கு இறைச்சமூகம்**

08.07.2018 **ஆண்டின் பொதுக்காலம் 14-ஆம் ஞாயிறு**
முதல் வாசகம்: எசேக்கியல் 2:2-5
இரண்டாம் வாசகம்: 2 கொரிந்தியர் 12:7-10
நற்செய்தி வாசகம்: புனித மாற்கு 6:1-6
**சிறப்பிப்பவர்கள்: பங்கு இளையோர் (பெண்கள்)**

15.07.2018 **ஆண்டின் பொதுக்காலம் 15-ஆம் ஞாயிறு**
முதல் வாசகம்: ஆமோஸ் 7:12 -15
இரண்டாம் வாசகம்: எபேசியர் 1:3-14
நற்செய்தி வாசகம்: புனித மாற்கு 6:1-13
**சிறப்பிப்பவர்கள்: புனித தோமையார் அன்பியம்**

22.07.2018 **ஆண்டின் பொதுக்காலம் 16-ஆம் ஞாயிறு**
முதல் வாசகம்: எரேமியா 23:1-6
இரண்டாம் வாசகம்: எபேசியர் 2:13 -18
நற்செய்தி வாசகம்: புனித மாற்கு 6:30-34
**சிறப்பிப்பவர்கள்: மறைக்கல்வி மாணவ, மாணவியர்கள்**

29.07.2018 **ஆண்டின் பொதுக்காலம் 17-ஆம் ஞாயிறு**
முதல் வாசகம்: 2 அரசர்கள் 4: 42-44
இரண்டாம் வாசகம்: எபேசியர் 4:1-6
நற்செய்தி வாசகம்: புனித யோவான் 6: 1-15
**சிறப்பிப்பவர்கள்: அன்பியப் பொறுப்பாளர்கள்**

# Holy Mass at our Parish's SMA Convent





# Blessed Virgin Mary Queen of Heaven and Earth - A Grand Holy Mass











http://www.st-judesshrine.com/

Like https://www.facebook.com/st.judesShrineVanuvampet/